**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074774
C

1. District மாவட்டம் : திருவாரூர் PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 10/2021 Date: நாள் 07/10/2021

2. (i) Act சட்டம்: 7 of PC Amendment Act 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Two weeks before on 6.10.21 & 4.10.21/12.45 6.10.21/1300 hrs Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் [illegible] Time to : நேரம் வரை 6.10.21 / 1500 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் FIR — Time : நேரம் 7.10.21 / 09.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 7.10.21/09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 8 km west
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அம்மையப்பன் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. S. மனோகரன் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் S/o. சாரங்கன்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 40/21 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் having own Advertisement concern in home (g) Address : முகவரி 4/121, Pillaiyar koil street, Aanaivadapathy, Ammaiyappan

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. பாலசுப்ரமணியன், கிராம நிர்வாக அலுவலர் அம்மையப்பன்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி. இரா.தமிழ்ச்செல்வி ஆகிய நான் 06.10.2021-ந் தேதி 15.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.S.மனோஜ்பாபு என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல்: S.மனோஜ்பாபு த/பெ சாரங்கன், 4/121 பிள்ளையார் கோயில் தெரு, ஆனைவடபாதி,அம்மையப்பன், திருவாரூர் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். பெறுதல்: காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். ஐயா, நான் ஆனைவடபாதி கிராமத்தில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் BA வரை படித்துள்ளேன். நான் RADS என்ற பெயரில் விளம்பரம் தயாரிக்கும் நிறுவனம் எனது வீட்டில் வைத்துள்ளேன். எனது தந்தை சாரங்கனுக்கு 76 வயது ஆகிறது. எனது தந்தை சாரங்கன் பெயரில் அம்மையப்பன் கிராமத்தில் புல எண் 200/15-ல் சுமார் 5038 சதுரஅடி மனை உள்ளது. மேற்படி மனையானது கடந்த 2013-ல் அம்மையப்பனை சேர்ந்த சூர்யா க/பெ கனகராஜ் மற்றும் திலகவதி க/பெ முத்துக்கிருஷ்ணன் ஆகியோரிடமிருந்து கிரய ஆவணம் 6552/2013 மற்றும் 6553/2013 மூலம் கிரயம் பெற்றது ஆகும். மேற்படி மனையின் முன்பகுதியில் நான்கு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

07/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் இரா. தமிழ்செல்வி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ..........
VSAC, திருவாரூர்.

கடைகளும், பின்புறம் காலிமனையும் உள்ளது. தற்போது மேற்படி இடத்தை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளோம். அதற்கு பட்டா தேவைப்படுகிறது. எனவே கடந்த 27.07.2021-ந் தேதி பட்டா வேண்டி அம்மையப்பன் கிராமநிர்வாக அலுவலகம் சென்று, VAO திரு.பாலசுப்பிரமணியன் என்பவரை எனது தந்தை நேரில் பார்த்துள்ளார். அப்போது எனது தந்தையுடன் அவரது நண்பர் மணி (எ) தண்டபாணி என்பவரும் சென்றிருந்தார். மேற்படி கிராம நிர்வாக அலுவலரிடம் எங்களது மனைக்கு பட்டா வேண்டும் அதற்கான வழிமுறைகள் என்ன என்று எனது அப்பா கேட்டுள்ளார். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் நீங்கள் ஒருபேப்பரில் கையெழுத்து போட்டு கொடுங்கள், மேலும் ரூ.3,000/- பணம் கொடுங்கள், நானே மனு தயார் செய்து, தங்களுக்கு பட்டா விண்ணப்பித்து பட்டா பெற்று தருகிறேன் என்று தெரிவித்துள்ளார். எனது தந்தையும் அன்றைய தினமே ரூ.3,000/- திரு. பாலசுப்பிரமணியனிடம் கொடுத்துவிட்டு பட்டா வழங்க ஏற்பாடு செய்து தருமாறு சொல்லிவிட்டு வந்துள்ளார். வீட்டிற்கு வந்து இந்த விபரத்தை என்னிடம் சொல்லி பணம் எதற்கு VAO கேட்டார் என்று என்னிடம் கேட்டார். நான் அவ்வாறு பணம் எதுவும் கொடுக்க வேண்டியது இல்லை. ஏன் கொடுத்தீர்கள் என்று வருத்தப்பட்டேன். அதன் பின்னர் சுமார் இரண்டு முறை மீண்டும் கிராம நிர்வாக அலுவலரிடம் சென்று பட்டா தொடர்பாக எனது தந்தை கேட்டுள்ளார். எனது தந்தை கடந்த இரண்டு வாரம் முன்பு தனது நண்பர் மணியுடன் VAO அலுவலகம் சென்று பட்டா தொடர்பாக VAOவிடம் கேட்டுள்ளார். அப்போது VAO அவர்கள் பட்டா தொடர்பான கோப்பு திருவாரூர் தாலுக்கா அலுவலகத்தில் தாசில்தாரிடம் கையொழுத்துக்காக நிலுவையில் உள்ளது என்றும், பட்டாவை வாங்க மேலும் ரூ.18,000/- செலவாகும் என்றும், பட்டா பெற்றுதர ரூ.18,000/- கையூட்டாக எனது தந்தையிடம் VAO கேட்டுள்ளார். இது தொடர்பாக எனது தந்தை என்னிடம் வந்து பட்டா வழங்க மேலும் ரூ.18,000/- கையூட்டு வேண்டும் என்று கிராம நிர்வாக அலுவலர் திரு. பாலசுப்பிரமணியன் கூறியதாக சொன்னார். மேலும் அவரால் இனிமேல் அலையமுடியாது என்றும், என்னை போய் பார்க்க சொன்னார். இதனால் எனது தந்தை மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானார். எனவே நான் எனது தந்தையின் நண்பர் மணி என்பவருடன் 04.10.2021ஆம் தேதி மதியம் 12.45 மணியளவில் அம்மையப்பன் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு VAO திரு.பாலசுப்பிரமணியனை நேரில் சந்திக்க சென்ற போது VAO விடம் அப்பா நண்பர் என்னை அறிமுகப்படுத்தினார். அதற்கு VAO சரி என்ன பண்ணலாம் என்று கேட்டார். அப்பாவின் நண்பர், VAO விடம், என்னை வாங்கிட்டு வரசொன்னார், பணம் அப்பரம் சேத்து கொடுத்துடலாம் என்று எனது அப்பா சொன்னதாக கூறினார். VAO அதற்கு நான் ஒன்னும் இதுல சொல்றதுக்கு இல்ல என்று சொன்னார். நான் அப்பாவிடம் எதுவும் சொல்ல வேண்டாம், என்னிடமே நேரா சொல்லுங்கள் என்று VAO விடம் சொன்னேன். அதற்கு VAO வும் ஏற்கனவே சொல்லியாச்சு என்று எனது அப்பாவின் நண்பர் மணியை பார்த்தார். அப்பாவின் நண்பர் மணி என்னிடம், ரூ.21,000/- கேட்டாங்க, ரூ.3000/- ஏற்கனவே கொடுத்திருக்கு அதை குறைத்துக்கொண்டு கொடுக்கனும் என்று சொன்னார். நான் பட்டாவிற்கு இன்னும் என்ன பிராசஸ் பெண்டிங்ல இருக்கு என்று கேட்டேன். அதற்கு VAO தாசில்தார்கிட்ட இருக்கு, நீங்க ரெடி பண்ணி கொடுங்க, நான் பண்ணிதறேன் என்று சொன்னார். நான் சரியென்று சொல்லிவிட்டு வீட்டிற்கு போய்விட்டேன். இன்று 06.10.2021-ந் தேதி புதன் கிழமை மதியம் 01.00 மணியளவில் VAO பாலசுப்பிரமணியன் அவர்களை பார்க்க சென்றேன். அவர் என்னிடம் பட்டா இன்னும் ரெடியாகவில்லை, இன்று கேட்டுவிடுகிறேன். நீங்கள் சொன்ன பணத்தை நாளை எடுத்து வாருங்கள் என்று சொன்னார். நாளை எத்தனை மணிக்கு வருவது என்று கேட்டேன். அதற்கு

12.00 மணிக்கு மேல் வாருங்கள், நான் இல்லாவிட்டால் எனது போனில் கூப்பிடுங்கள் என்று அவரது செல் நம்பர் 7010668593 என கூறினார். பட்டா வழங்குவதற்கு மேற்படி VAO பாலசுப்பிரமணியன் கேட்ட கையூட்டு பணத்தை எனக்கு கொடுக்க விருப்பம் இல்லை. அதனால் இந்த புகாரை தருகிறேன். அவர் கையூட்டாக கேட்ட பணத்தை எடுத்து வந்துள்ளேன். மேற்படி VAO பாலசுப்பிரமணியன் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் கிரய பத்திர ஆவணம் 6552/2013 மற்றும் 6553/2013 ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும் கடந்த 04.10.2021-ந் தேதி VAO பணம் கேட்டது தொடர்பான உரையாடலை எனது செல்போனில் பதிவு செய்துள்ளேன். Sd (S.மனோஜ்பாபு) 06.10.2021... அய்யா மேற்படி புகாரை 06.10.2021ம் தேதி 15.00 Hrs பெற்றும் முன்விசாரணை செய்தும், அதன்படி திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண் 10/2021 U/s 7 of Prevention of Corruption Amendment Act 2018 படி 07.10.2021ம் தேதி 09.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. Sd (இரா.தமிழ்ச்செல்வி) 7.10.2021 Inspr/V&AC/Thiruvarur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

7/10/2021
Inspr/V&AC/TVR